Regd. No. M. 4593. "KUDI ARASU" 12 பக்கங்கள்

# குடி அரசு

டி. எம். சுப்பிரமணியன்

Estd. 1924. தனிப்பிரதி அணா ரூ. 0-1-6

வருட சந்தா ரூ. 5. சனி வெளியீடு.

மாலை 18 } ஈரோடு, 16-12-1944 மார்கழி மீ 2உ { மலர் 10

# இராமநாதபுரத்தில் பெரியார்

## அந்த ஜில்லாவுக்கு சுமார் 1500 அங்கத்தினர்கள் பதிவாய்விட்டனர்

இராமநாதபுரம் ஜில்லா இராஜபாளையத்தில் 6-12-44ந் தேதி நடந்த தோழர்கள் பாலராஜு—சிவபாக்கியம் வாழ்க்கை ஒப்பந்தத்திற்கு தலைமை வகித்த பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் சொற்பொழிவு:-

"மணமக்களே! தாய்மார்களே!! தோழர்களே!!!

இத்திருமணத்திற்கு என்னை [illegible] வேண்டுமென்று 4-மாதமாக தோழர் ஆதிநாராயணன் விரும்பினார். நான் சென்னவாரம் முழுவதும் தஞ்சை ஜில்லாவில் சுற்றுப்பிரயாணம் செய்த அலுப்பாலும் சிறிது காய்ச்சல் இருந்ததாலும் வராமல் நின்றுவிடலாம் என்று கருதினேன். ஆனால் சேலம் மாநாட்டின் தீர்மானத்தின்படி இராமநாதபுரம் ஜில்லாவின் விகிதமான குறைந்த அளவு 1000-மெம்பர் கூட திராவிட கழகத்திற்கு அநேகமாக ஐஸ்டிஸ் கட்சிக்கு சேர்க்கப்படாமல் இருப்பதால் இதைப்பற்றி கவனித்துப்போக இதை சந்தர்ப்பமாகக் கொண்டு இவ்வளவு அசௌகரியத்தில் இங்கு வந்தேன்.

நீங்கள் அது தெரிந்து நான் இங்கு வந்ததுமே 216-அங்கத்தினர்கள் சேர்த்தும், இதற்கு சந்தா ரூ. 27-4-0 கொடுத்து இந்த ஜில்லாவிற்கு கோட்டா சேர்க்கப்படவேண்டிய (விகிதம்) 1000க்கு மேலாகவே ஆக்கப்பட்டு வெளியிடும்படியாகச் செய்துவிட்டதால் என்னுடைய சுற்றுப்பிரயாண அலுப்பும், காய்ச்சலும், வலியும் எங்கேயோ போய் விட்டது. அதற்காக உங்களுக்கு நன்றி செலுத்துகிறேன். ஆனால் இவ்வளவோடு நின்றுவிடாமல் இதை ஜில்லாவுக்கு 5000 மெம்பர்களாவது சேர்க்கப்படவேண்டும். செட்டிநாட்டிலும் விருதுநகரிலும் தீவிரமாக அங்கத்தினர் சேர்க்கப்படுவது கேட்டு நீங்கள் மகிழ்ச்சி அடைவீர்கள்.

மற்றும் நாம் எந்த தேர்தலில் வெற்றிபெற நினைத்தாலும்; ஏன்? அபேட்சகராய் நிற்க நினைப்பவரானாலும் அத்தொகுதி ஓட்டர்கள் எல்லோரும் அங்கத்தினர்களாகச் சேர்க்கப்பட்டவர்களாக இருக்கவேண்டும். அதுதான் நமது கட்சியின் உண்மையான பலத்திற்கு ஆதாரமாகும். மற்றபடி பொது உடைமையையும், பூரண சுயராஜ்ஜியத்தையும், சுதந்திர நடைமுறைக்கொள்கைகளையும் பாமர மக்களிடம் சொல்லி ஏமாற்றி ஓட்டு வாங்குவதோ அல்லது சர்க்காரைக் கெஞ்சி பதவி பெறுவதோ இனி ஆபத்தாகவும், தற்கொலையாகவும், பயனற்றதாகவும், பரிகசிக்கத்தக்கதாகவும் தான் முடியும். அன்றியும் அதனால் சில தனிப்பட்டவர்கள் சுயநலம் அடையலாமே ஒழிய நாட்டுக்கோ இந்த ஓட்டர்களுக்கு ஒன்றும் செய்ய முடியாது. ஆதலால் கூடுமான வரை வயது வந்தவர்களை யெல்லாம் அங்கத்தினர்கள் ஆக்க முயற்சி செய்யுங்கள்.

### திருமணம்

இத்திருமணத்தில் நான் என்ன புதிதாகப் பேசப்போகிறேன். இந்த முறை திருமணம் இப்போது நாட்டில் சர்வ சாதாரணமாக ஆகிவிட்டது. அதிலும் இந்த நாடார் சமுதாயத்தில் இதுவே முறையும் உரிமையுமாக ஆகிவிட்டது. ஆதலால் இந்தத் திருமண முறையைப் பற்றி என்ன பேசுவது என்பது தோன்றவில்லை. பொதுவாகவே திருமணம் என்பதற்கு எந்த முறை தகுதியானது என்று சொல்லுவதற்கு ஒரு முறையுமே இல்லை. "ஏதோ பழக்கவழக்கம், பெரியோர் நடந்தது" என்பதைத் தவிர வேறு ஒன்றும் சொல்ல முடியாது. அதிலும் திராவிடர்களுக்கு நமக்கு எந்த முறை இருந்தது, எது சரி என்று எடுத்துக்காட்ட ஒன்றுமேயில்லை. புலவர்கள் எதாவது பிதற்றலாம் [illegible] அது பாமரர்களுக்கே புரியாததாகத்தான் இருக்கும்.

### திருமணத்தின் அவசியம்

இந்த உலகத்தின் சொத்தைப் பற்றியும், மேல் உலகம் என்பதில் மோக்ஷம் என்பதைப் பற்றியும் லட்சியம் இல்லாவிட்டால் திருமணம் என்பதாக, வாழ்க்கை ஒப்பந்தம் என்பதாகக்கூட எதுவும் தேவையில்லை. நாம் தேடிய சொத்துக்கு நாம் பெற்ற பிள்ளை இருக்கவேண்டும் என்பதே திருமணத்தின் முக்கிய நோக்கமாகும். அதற்கும் அந்தந்த சமுதாயப்படி சொத்தை அனுபவிக்க சிலருக்கு ஆண்பிள்ளை வேண்டும், சிலருக்குப் பெண்பிள்ளை வேண்டும். தேவதாசிகளும், மருமக்கத்தாயம் உள்ளவர்களும் தங்கள் சொத்துக்குப் பின் சந்ததியாக, உரிமைக்குப் பெண் குழந்தைகள் பெறவும், இல்லாவிட்டால் பெண் குழந்தையை தத்து எடுத்துக்கொள்ள ஆசைப்படுகிறார்கள்; மற்றவர்கள் நம் போன்றவர்கள் ஆண் குழந்தை பெறவும் இறந்துவிட்டால் ஆண் குழந்தைகளைத் தத்து எடுத்துக் கொள்ளவும் செய்கிறோம். இதற்காகவேதான்

திருமணம் பெரிதும் சடங்காக, ஒப்பந்தமாக, பதிவாக, சட்டத்திற்குள் அடங்கியதாகச் செய்யவேண்டி இருக்கிறது. இந்த நிலை மாறிவிட்டால் திருமணம் என்கின்ற வார்த்தையே மறைந்துபோகும்.

அதனால்தான் நான் இந்த முறைகூட முடிந்தமுடிவல்ல என்று அடிக்கடி சொல்லிவருகிறேன். இனி 40, 50 வருஷங்கழித்த பின்பு, அதாவது இந்த சொத்து முறைகள் மாறி பொதுவுடைமை முறை வந்து தாண்டவமாடும்போது இந்த முறைகூட இருக்காது என்பதோடு இதை ஒரு மூடநம்பிக்கை காட்டுமிராண்டிக் காலமுறை என்று சொல்லவேண்டி வரும் என்பதோடல்லாமல் இன்று உங்களில் பலரால் 'புரட்சிகாரன்'' என்று கூறப்படுகிற என்னை, 'ஒரு மூட நம்பிக்கைக்காரனாக வைதிகப் பிடுங்கல் இராமசாமி என்று ஒருவன் இருந்தான்' என்று என்னை உங்கள் பிள்ளைகள் பேரன்மார்கள் சொல்லும்படியான நிலைகூட வந்துவிடும் என்று நான் சொல்லுவதுண்டு.

### நம் திருமண முறை எது?

ஆகையால் திருமணத்திற்கு ஒரு கட்டுப்பாடுதான் வேண்டி இருக்கிறதே ஒழிய, முறை ஒன்றும் இன்று தேவை இல்லை. கட்டுப்பாடே வேண்டாத காலம் வருமென்றால் முறை வேண்டிய காலம் எதற்குஆக வேண்டி இருக்கும்? ஒரு சமயம் கட்டுப்பாடு வேண்டியதில்லை என்கின்ற தன்மை நடைபெறக் கட்டுப்பாடும் முறையும் வேண்டியதாக இருக்கலாம்.

இன்று நாமாகிய திராவிடர்களுக்கு நம்மைப் பற்றிய சரித்திரமும், நம் நாட்டைப் பற்றிய தன்மைகளும்கூடத் தெரியவில்லையானால், நம் திருமணத்திற்கு என்ன முறை சிறந்தது என்று எப்படிக் கண்டுபிடிக்க முடியும். அப்படித்தான் ஒன்று இருந்திருந்தாலும் அதைப் பற்றி இன்று பேசுவது எப்படி அறிவுடைமையும் பொருத்த முடையதுமாகும்.

இன்று நாம் எலக்ட்ரிக் (மின்சார) விளக்கு வெளிச்சத்தில் இருந்து கொண்டு, திராவிடர்களுக்கு முன்காலத்தில் விளக்கு எப்படி இருந்தது என்று ஆராய்ச்சி செய்தால், அது பழங்காலத்து மக்களுக்கு இருந்த அறிவைப் பற்றி குறிக்க உதவுமே தவிர அதைப் பயன்படுத்த முடியுமா? நாம் ஆகாயக் கப்பலில் பறந்துகொண்டு பழங்கால திராவிடர் எப்படிப் பிரயாணம் செய்தார்கள் என்று கண்டுபிடிக்க ஆராய்ச்சி நடத்தினால் அது பழங்கால மக்கள் தன்மையை அறிந்துகொள்ள முடியுமே தவிர அந்தக்காலத்து வாகனத்துக்குப் போக முடியுமா?

### காலப்போக்கு

இதுபோல் தான் நம்முடைய ஒவ்வொரு பழங்கால சொந்தமும் ஆகும். நம் கடவுள், மதம், ஒழுக்கம்; கடவுள், மத, ஒழுக்க நூல் ஆகியவைகள் கூட அப்படித்தானே இருக்க முடியும். மற்ற துறைகளில் அக்கால மக்களுக்கு என்ன அறிவு அனுபவம் இருந்ததோ அதுதானே இந்தத் துறைகளிலும் இருந்திருக்கும்? உதாரணமாக அந்தக் காலத்தில் பொய் பேசுகிற மனிதன் இருப்பது அதிசயிக்கத் தக்கதாக இருந்திருக்கும். ஆனால் இந்தக் காலத்தில் பொய் பேசாத மனிதன் இருப்பது அதிசயமாக இருக்கிறது. ஏன் என்றால் காலம் மக்களை அப்படித் தள்ளிக் கொண்டு போகிறது. காலப்போக்குக்கு மனிதன் கட்டுப்பட்டு ஆகவேண்டும் இல்லாவிட்டால் காட்டுக்குப் போய்விட வேண்டும். அங்கும்கூட காலம் அவனை தொடர்ந்துகொண்டுதான் போகும். பள்ளத்தை நோக்கித் தண்ணீர் ஓடுவதுபோல் காலத்தை நோக்கி மனிதன் போய்த்தான் தீருவான். இதில் யாருக்கும் சந்தேகம்வேண்டியதில்லை. என்பேச்சும், இந்தக் கூட்டமும், உங்கள் இருக்கையும், காலப்போக்கைப் பொறுத்ததே தவிர என்னையோ, உங்களையோ பொறுத்ததல்ல. காலப்போக்கை அறியாத பட்டிக்காட்டார், பாமரத்தனம் கொண்டவர்கள் ஆகியவர்கள்தான் மாறுதல், என்னாலும் உங்களாலும் ஆனதாகக் கருதுவார்கள். ஆனால் அவர்களும் அறிவு அனுபவம்பெற்றவுடன் காலப்போக்குதான் காரணம் என்பதை உணர்ந்துகொள்ளுவார்கள். ஆனால் அதற்கு கொஞ்சம்நாள் பிடிக்கும். உதாரணமாக அந்தக் கொஞ்சநாள் பிடிக்கும் என்பது தான் புரட்சிக்காரர்கள் என்பவர்களுக்கும், வைதீகர்கள்-மாறுதல் வேண்டாதவர்கள், பழமை விரும்பிகள் என்பவர்களுக்கும் உள்ள பேதமாகும். அதுவேதான் வாலிபர்கள் என்பவர்களுக்கும் வயோதிகர்கள் என்பவர்களுக்கும் உள்ள பேதமாகும். அதாவது வாலிபர்களுக்குப் புதுமை சீக்கிரம் தோன்றும், சீக்கிரம் பிடிக்கும். காரணம் அவர்கள் உள்ளம் எழுதாத வெறும் சிலேட்டு போன்றது. வயதானவர்கள் உள்ளம் பல சங்கதிகள் எழுதப்பெற்றது. புதிய தன்மைகள் பதியப்பட வேண்டுமானால் முன்னால் பதிந்தவைகள் அழிக்கப்படவேண்டும். அவைகள் சுலபத்தில் அழிக்கமுடியாதவாறு ஆழப் பதிந்துபோயிருக்கும்.

### காந்தி—சங்கராச்சாரி

இதைத்தான் வைதீகம் என்றும், பிடிவாதம் என்றும், காலத்திற்குத் தகுந்தபடி மாற்றிக் கொள்ள முடியாமை என்றும் பெரிதும் சொல்லுகிறோம்.

உதாரணமாக காந்தியாரையோ, சங்கராச்சாரியாரையோ பகுத்தறிவுக்கும் பிரத்தியட்ச அனுபவத்திற்கும் இயற்கைக்கும் இணங்கும்படி செய்துவிட எப்போதாவது யாராலாவது ஆகுமென்று (எடுத்துச் சொல்லுவது) மூலம் முடியுமா என்று பாருங்கள். ஒருநாளும் முடியாது.

ஏன் அந்த உள்ளங்கள் பழமையினால் நிறைந்துபோய் விட்டன. ஆழப்பதியப்பதிக்கப்பட்டும் போய்விட்டன, அதோடு அவர்களுக்கு ஒரு அளவுக்கு அவசியமும் ஏற்பட்டுவிட்டன. ஆதலால் நிர்ப்பந்தமில்லாமல் அவர்கள் பகுத்தறிவுக்கும், காலப்போக்குக்கும், முற்போக்குக்கும் சுலபத்தில் இணங்க மாட்டார்கள். அதுபோல்தான் அந்தத் தன்மையுள்ள மற்றவர்களும் ஆவார்கள். எனவே இந்தத் திருமணம் இன்றைய காலப்போக்குக்கு ஏற்பதோடு சரி.

### இதுவே போதும்

இன்று இத் திருமணத்தில் தாலி கட்டினாலும்கூட இது பெரிதும்

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)

# வேண்டுகோள்

தங்கவயல் தோழர்களே!

சேலம் மாநாட்டின் தீர்மானப்படி இன்றுவரை 17 ஆயிரத்திற்கு மேற்கொண்ட அங்கத்தினர்கள் நமது திராவிட கழகத்தில் பதிவு செய்துவிட்டார்கள். ஆனால் தங்கவயல்மட்டும் குறைந்த அளவு அங்கத்தினர்களைச் சேர்த்து இதுவரையிலும் அனுப்பாமல் இருக்கிறது. என். டி. பிளாக், டபிள்யு. டி. பிளாக், ஈ. டி. பிளாக் இலுள்ள தோழர்கள் மிக ஊக்கத்துடன் அங்கத்தினர்களைச் சேர்த்து இந்த மாதம் முடிவுக்குள் தலைமை நிலயத்திற்கு அனுப்பும்படி மிக வணக்கத்துடன் கேட்டுக் கொள்கிறேன்.

கெ. எஸ். ராசகோபால்,
சாம்பியன் ரீப்,
பொன்வயல்.

* *

வந்தவாசி நண்பர்களே!

மற்ற மாவட்டங்களில் ஆயிரக்கணக்காக அங்கத்தினர்கள் சேர்ந்திருக்க நம் மாவட்டத்தில் மாத்திரம் ஏன் இன்னும் 1000-த்திற்குக்கூட அங்கத்தினர்கள் சேரவில்லை, நம் வட ஆற்காடு மாவட்டத்திற்கு ஏற்படும் அவமானம் நமக்கில்லையா? வந்தவாசி வட்டத்திலேயே 1000 கணக்கில் அங்கத்தினர்கள் சேர்க்கலாமே. திராவிடர் கழகத்தை ஆதரிக்கும் பெரியோர்களும், மாணவ வீரர்களும் 100 கணக்கில் வந்தவாசியில் உள்ளனரே. ஏனோ அவர்களுக்கு தூக்கம். திராவிட நண்பர்களே எழுவீர்! திராவிட முரசு கொட்டுவீர்! பெருவாரியாக அங்கத்தினர்களைச் சேர்த்து நம் மாவட்டத்தை முதல் வரிசையில் கொண்டுவருவீர்!

எஸ். ஆர். கார்த்திகேயன்.

* *

சென்னைத் தோழர்களுக்கு!

இதுவரை சென்னை நகரில் 1300 உறுப்பினர்கள் மட்டுமே சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். மற்றும், சென்னையின் பல வட்டங்களிலுமுள்ள முக்கிய தோழர்களிடம் சுமார் 1000 இரசீதுகள் வரை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆயிரத்துக்கு மேற்பட்டு சேர்ந்துவிட்டதால், நமது வேலை பூர்த்தியாகிவிட்டதென்று சில தோழர்கள் கருதுவதாகத் தெரிகிறது. இது போதுமா?

சென்னை மாகாணத்திற்குத் தலைநகராய சென்னை நகரில் இம்மாத முடிவுக்குள் குறைந்தது 3000 உறுப்பினர்களையாவது சேர்க்கப்படாவிடில் சென்னைத் தோழர்களாகிய நமது (உறுப்பினர்களைச் சேர்க்கும்) தொண்டு வெற்றிகரமாக முடிந்தது என்று கூறுவதற்கோ [illegible] இடமில்லையல்லவா?

எனவே, இரசீது புத்தகங்கள் பெற்றுள்ள நமது தோழர்கள் தயவுசெய்து உடனே பாக்கியையும் பூர்த்திசெய்து (ஒவ்வொரு புத்தகமாகிலும்) ஜில்லா தலைமை ஆபீஸ் இரசீதுகளுடனும் அதற்கான கட்டணங்களுடனும் சேர்த்து என்னிடமாவது அல்லது தங்கசாலைத் தெரு சுமைதாங்கி இராமர் கோயில் எதிரிலுள்ள நியூஸ் பேப்பர் மார்ட் தோழர் டி. மகாதேவன் அவர்களிடமாவது கொடுக்க வேணுமாய்க் கேட்டுக் கொள்வதுடன், மேலும் இரசீது புத்தகங்கள்பெற்று உறுப்பினர்களைச்சேர்க்குமாறும் வேண்டிக்கொள்கிறேன்.

என். வி. என்.
கூட்டுக்காரியதரிசி,
சென்னை ஜில்லா திராவிடர் கழகம்.

* *

வ. ஆ. மாவட்ட இயக்க அன்பர்களுக்கு,

மற்ற மாவட்டங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது நமது மாவட்டம் விஸ்தீரணத்திலும், ஜனத்தொகையிலும் மிகப் பெரியதாயிருந்தும் திராவிடர் கழக அங்கத்தினர் எண்ணிக்கையில் மிகவும் பின்னணியில் இருப்பது நமக்கு மானக்கேடான விஷயம். ஆகையால் ஒவ்வொரு தோழரும் அங்கத்தினராய்ச் சேருதல் இன்றியமையாதது. இன்னும் கழகத்தில் சேராதவர்கள் காலம் தாழ்த்தாது உடனே கீழ்கண்ட இடத்தில் தங்களைப் பதிவுசெய்து கொள்ளக் கேட்டுக் கொள்ளுகிறோம். சேர்ந்த ஒவ்வொருவரும், ஒரு புதிய அங்கத்தினரையாவது சேர்த்துக் கொடுக்கவும், சேர்க்கப்படும் இடம்: 'திராவிடன்' பதிப்பகம், 183, காம்பஜார், வேலூர்.

திராவிட கழகத்தார்,
வேலூர், (வ. ஆ)

* *

திருச்சி தோழர்களுக்கு,

நம் ஜில்லாவில் 2-12-44 'குடிஅரசி'ல் 2600 அங்கத்தினர்கள் தான் சேர்ந்திருப்பதாகத் தெரிகிறது. நம் ஜில்லாவில் குறைந்தது 6000 அங்கத்தினராவது சேர்ந்திருக்கவேண்டாமா? ஏன் உறக்கம்? உடனே அங்கத்தினராகச் சேர்ந்து நம் தலைவர் பெரியாருக்கு ஊக்கத்தை அளியுங்கள். இம்மாதத்திற்குள் நம் ஜில்லாவில் 5000 அங்கத்தினராவது சேரவேண்டும்.

அங்கத்தினர் சேர விரும்புவோர் கீழ்கண்ட இடத்தில் அங்கத்தினராகச் சேரவும். சேருமிடம்: டி. எஸ். விசுவலிங்கம், வெற்றிலைபாக்கு—தூள் வியாபாரம், பெரிய கடைவீதி, திருச்சி.

டி. எம். தங்கராஜ்,
திராவிட மாணவன்.

* *

கும்பகோணம் தோழர்களுக்கு,

திராவிடர் கழக அங்கத்தினர்கள் சேர்க்கும் புத்தகம் வைத்திருக்கும் தோழர்கள் 20-12-44க்குள் சந்தா புத்தகத்தின் அடிக் கட்டையும்—வசூலான சந்தாத் தொகையும் என்னிடம் சேர்ப்பிக்குமாறு வணக்கமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

*

தஞ்சை, திருச்சி, தென்னார்க்காடு
தோழர்களுக்கு,

31-12-44-க்குள் ஜில்லா ஒன்றுக்கு 3000 மெம்பர்களுக்குக் குறையாதபடி சேர்த்து மாகாணக் கழகத்திற்கு அனுப்புவதற்கு வேண்டிய முயற்சி எடுத்து ஆவனச் செய்யும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

கே. கே. நீலமேகம்,
திராவிடர் கழகம்,
கும்பகோணம்.

[மேற்கொண்டு பல வேண்டுகோள்கள் வந்திருக்கின்றன. இடமின்மையால் வெளியிட முடியவில்லை. ஆசிரியர்]

## நாகையில் பெரியார்

2-12-44-ந் தேதி நாகைக்கு வந்த பெரியார் ஈ. வெ. ரா., தோழர் கே. கே. நீலமேகம், எஸ். கே. சாமி, வி. சின்னதம்பி ஆகியவர்கள் புகை வண்டி நிலயத்திலிருந்து ஊர்வலமாக கழகக் கட்டிடத்திற்கு அழைத்து வரப்பட்டார்கள்.

காலை 11-30 மணிக்கு குடந்தைத் தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் திராவிடர் கழகத்தின் வேலை என்ன? என்பது பற்றி சொற்பொழிவாற்றினார்.

மாலை 3-30 மணிக்கு தலைவர் பெரியார் அவர்கள் தலைமையில் தன் மதிப்பு கழக கட்டிடக் கமிட்டிக்கூட்டம் கூடியது.

மாலை 6-30 மணிக்கு நாகை தேசிய உயர்தர (நேஷனல் ஹைஸ்கூல்) கலைக்கூடத்தில் கழக தலைவர் ஆர். வி. கோபால் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அது சமயம் பெரியார் ஈ. வெ. ரா. தோழர்கள் கே. கே. நீலமேகம், எஸ். கே. சாமி, வி. சின்னதம்பி, வெளவாலடி சம்சுதீன், ஆரூர் மு. கருணாநிதி, நீரவி கோ. இரத்தினவேலு ஆகியவர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

## தோழர் மீனாட்சியம்மாள்

சூலூர் தோழர் எஸ். பீ. மீனாட்சியம்மாள் அவர்கள் கோவை ஜில்லா முழுமையும் சுற்றுப்பிரயாணம்செய்து இயக்கப் பிரசாரம் செய்யவும், திராவிடர் கழகத்திற்கு உறுப்பினர் சேர்க்கவும் விரும்புவதால் கோவை ஜில்லாவில் கூட்டங்கள் போட எண்ணியுள்ளவர்கள் தோழர்கள் ஆசிரியை, எஸ். பி. மீனாட்சியம்மாள், சூலூர், போஸ்டு (எஸ். ஐ. ஆர்.) என்ற முகவரிக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

## சி. டி. நாயகம் மறைவு

தோழர் சி. டி. நாயகம் அவர்கள் ஒருமாத காலமாய் நோய் வாய்ப்பட்டிருந்து அவருடைய சொந்த ஊராகிய குலசேகரப்பட்டணத்தில் 66-வது வயதில் 13-ந் தேதி முடிவெய்தினார் என்கின்ற செய்தியைக் கேட்க தமிழ் மக்களில் துக்கப்படாதவர் எவருமிருக்கமாட்டார். நாயகம் அவர்கள் கூட்டுறவு டிப்டி ரிஜிஸ்திராராக இருந்து ரிட்டயர் ஆனவர். சட்டசபை மெம்பராயும், ஜஸ்டிஸ் கட்சியின் நிர்வாகக் கமிட்டி உறுப்பினராயும், லீகல் போர்டு மெம்பராயும், தாலுகா தேசியப் போர்டு முனை அமைப்பாளராயும், திருநெல்வேலி தென்னிந்திய பாங்க் டைரெக்டராயும் இருந்து வந்தவர் என்பதோடு 40 வருட காலமாக இருந்து வரும் தாயம்மாள் பெண் பாடசாலைக்கும், சென்னை தியாகராய நகரில் இருந்து வரும் எலிமெண்டரி அண்டு செகண்டரி பாடசாலைகளுக்கு காரியதரிசியாகவும், நிர்வாகியாகவும் இருந்து வந்தவர். அவர் பதவியிலிருக்கும்போது திராவிட மக்களுடைய நலனையே குறியாகக் கொண்டு அதற்காக தன்னாலான உபகாரம் செய்தவர். தனது சொத்துக்களை ஏராளமாய் பெரிதும் மேற்கண்ட பள்ளிக் கூடங்களின் நன்மைக்காகவே தர்மம் செய்தவர். தம் நாள் முழுவதும் ஓய்வின்றி உழைத்தவர். அவருக்கு இரண்டு மகனும், இரண்டு பெண்களும் இருக்கிறதோடு யாவரும் படித்துப் பட்டம் பெற்று உத்தியோகங்களில் இருக்கிறார்கள். மனைவியாரும் இருக்கிறார்கள்.


## வேலூர் புத்தகசாலைகள்

வேலூர் நகராண்மை கழக புத்தக சாலைக்கும் வேலூர் வூரீஸ் கல்லூரி புத்தகசாலைக்கும் 'பகுத்தறிவு', 'குடிஅரசு' ஆகிய இரண்டு பதிப்பக வெளியீடான எல்லா புத்தகங்களையும் இலவசமாக வாங்கிக்கொடுப்பதாகவும் அதற்காக அனுமதி அளிக்கும்படியும் இரு வாசகசாலையின் அதிகாரிகளை வேலூர் நம் [illegible] கழகத்தார் கேட்டிருப்பதாகத் தெரிகிறது.

## வீரசைவர் மனமாற்றம்

மேலச்சேரி திராவிடர் கழகத்தின் ஆதரவில் 27-11-44-ஆந் தேதி தோழர் அ. மா. ராமச்சந்திர உடையார் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் தோழர் சே. ரா. நாராயணசாமி செட்டியார் புராண ஆபாசங்களைப் பற்றியும், கார்த்திகைப் பண்டிகை கொண்டாடுவது மூட வழக்கமென்றும் வெகு விரிவாகப் பேசினார். அதுசமயம், தோழர் சே. ரா. நாராயணசாமி செட்டியார் இதற்குமுன் வீரசைவராயிருந்து இப்பொழுது திராவிடர் கழகத்தில் சேர்ந்து சுயமரியாதை இயக்கத்தை ஆதரித்து பிரசாரம் செய்வதைக் குறித்து பாராட்டப்பட்டது. மேலும் டை. செட்டியார் அவர்கள் சுயமரியாதைத் சொன்னபடி மூட சடங்குகள் இல்லாமல் வீடு குடித்தனம் போனதைப்பற்றியும் கழகத்தில் பாராட்டப்பட்டது. அவர் கடந்த 2-வாரங்களாக திருமண் (நாமம்) போடவில்லை. தோழர் மே. சே. கோபாலன் அவர்களால் வந்தனோபசாரம்கூறக் கூட்டம் கலைந்தது.

## இந்திய கடற்படை வீரர்



இந்தியக் கடலோரத்தில் பிரிட்டிஷ் இந்திய கடற்படையைச் சேர்ந்த இந்திய ஆபீசர்கள், வீரர்கள் ஆகியவர்களின் வீரத்தைப்பாராட்டி அடிக்கடி அறிக்கைகள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. அவ்வாறு பாராட்டப்பட்டவர்களில் ஒருவர்தான் இப்படத்தில் காணப்படுபவர். இவர் புதுக்கோட்டை சமஸ்தானத்தைச் சேர்ந்த ஓ.செ. 17264 ஆர். எஸ். ராஜன். இவர் ஒரு சாதாரண வீரர்.

## பெரியார் பிறந்த தினக் கொண்டாட்டம்

வாழ்நடை: திராவிடர் கழகத்தின் சார்பாக பெரியார் பிறந்தவிழா 9-12-44 தேதி இவ்வூர் நாட்டாண்மையாளர் தோழர் டி. முனுசாமி கவுண்டர் தலைமையில் கொண்டாடப்பட்டது. அதுசமயம் தோழர் வி. எஸ். கிருஷ்ணசாமி அவர்கள் பெரியார் படத்தைத் திறந்து ஒரு அரிய சொற்பொழிவு ஆற்றினார். மேலும் தீவிரமாக திராவிடர் கழகத்தில் அங்கத்தினர்களாக சேரவேண்டும் என்று வலியுறுத்தினார். பொதுமக்கள் கைகளை தட்டி சேர உறுதி கூறினார்கள். பின் கழக காரியதரிசி தோழர் வ. சுப்பிரமணியன் அவர்களால் வந்தனம்கூற கூட்டம் முடிந்தது.

கழகத்திற்கு நன்கொடை ரூபாய் 56 வழங்கப்பட்டது. நன்கொடை அளித்த தோழர்கள் டபுள்யு. வி. சுந்தரராகவன் பி. ஏ. பி. எல்., மதராஸ் ரூ. 10; கிருஷ்ணசாமி செட்டியார் எம். ஏ. மதராஸ் ரூ. 5; செங்கல்வராய நாயுடு எம். சி. பி. ரூ. 5; வி. வி. துரைசாமி (வாழ்நடை) ரூ. 5; டெய்லர் கோவிந்தசாமியால் (மதராஸ்) போலீஸ் இலாகாவால் (எம். சி. பி.) ரூ. 7-7-0; சென்னை ரெக்ரூடிங் ஆபீஸ் (மதராஸ்) தோழர்களால் ரூ. 13-9-0; சென்னை நம் இயக்கத் தோழர்களால் ரூ. 10.; ஆக வரவு ரூ. 56-0-0.

## சென்னை ராடிகல் டெமாக்ரடிக் கட்சி

12-12-44-ந் தேதி ராடிகல் ஹாலில் நடைபெற்ற நகர பிரமுகர்களின் கூட்டம் ஒன்றில், ஜனவரி 13, 14 தேதிகளில் சென்னையில் நடைபெறும் சென்னை மாகாண ராடிகல் கட்சி மாநாட்டிற்காகவும், அதையொட்டி சென்னைக்கு விஜயம் செய்யும் தோழர் எம். என். ராயை வரவேற்பதற்காகவும் வரவேற்புக் கமிட்டி அமைக்கப்பட்டது. தோழர் என். முத்தையா முதலியார் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். தோழர் ஜி கிருஷ்ணமூர்த்தி எம். எல். ஏ. கமிட்டியின் பொதுக் காரியதரிசியாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## மறைவு

அரசர்குளம்: மேலப்பாளையம் கணேசபுரம் தோழர்கள் எஸ். பெரியசாமி, எஸ். சுப்பையன் என்பவர்களின் தந்தை தோழர் எஸ். சுடலைமுத்து அவர்கள் 17-11-44-ஆந் தேதி அரசர்குளத்தில் இயற்கையெய்தினார். தந்தையை இழந்த தனயன்களுக்கு எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதாக தோழர் எம். சாமி தயாளன் தெரிவிக்கிறார்.

## ஜஸ்டிஸ் கட்சித் தலைவர் ஈ. வெ. ராமசாமி அவர்களின் அறிக்கை

ஜஸ்டிஸ் கட்சியானது இதுகாலமாக அதன் பிரசாரத்தாலும், வேலைத்திட்டங்களாலும் பொது மக்கள் கவனத்தை ஈர்த்து சற்று செல்வாக்குக்கூடப் பெற்றிருப்பது வாசகர்கள் அறிந்ததேயாகும்.

இதைக்கண்ட ஒரு சிலர் அதாவது தோழர்கள் சர் ஆர். கே. ஷண்முகம் செட்டியார், சர் பி. டி. ராஜன், B. ராமச்சந்திர ரெட்டியார், C. B. E., முதலியவர்கள் கட்சியின் பேரால் வாழ்க்கை நடத்தும் மக்களாகிய தோழர் பி. பால சுப்பிரமணியம் முதலியவர்களையும் அப்படிப்பட்டவர்களுடைய பத்திரிகைகளாகிய "சண்டே அப்சர்வர்" முதலியவற்றையும் கையாளாக வைத்துக்கொண்டு மற்றும் நம் கட்சிக்கும் கொள்கைகளுக்கும் இன நலத்திற்கும் முழு எதிரிகளாகிய பார்ப்பனர் முதலியவர்களுடைய "தேசிய" பத்திரிகைகளினுடையவும் ஆதரவைப் பிடித்துக்கொண்டு தாங்களேதான் ஜஸ்டிஸ் கட்சியார்கள் என்றும், தோழர் B. ராமச்சந்திர ரெட்டியார் அதன் தலைவர் என்று ஒரு தடவையும், அவர் தற்காலத் தலைவர் என்று ஒரு தடவையும், ஆக்டிங் (பதில்) தலைவர் என்று ஒரு தடவையும், தோழர் பாலசுப்பரமணிய முதலியார் காரியதரிசி என்று ஒருதடவையும், அவர் கட்சி நிர்மாணஸ்தர் என்று ஒரு தடவையும், மெம்பர் அல்லாத தோழர் சர் ஆர். கே. ஷண்முகம் செட்டியார் 'அவர்கள்' நிர்வாக சபை மெம்பர் எனவும், ராவ்பகதூர் எ. துரைசாமி முதலியார் அவர்கள் கூட்டங்களையும், மாநாடுகளையும் கூட்டுகிறவர்களாகவும் பலவிதமான பெயர்களை அவர்களாகவே உற்பத்தி செய்துகொண்டும் உரிமையாக்கிக்கொண்டும் சமீபத்தில் தாங்கள் ஜஸ்டிஸ்கட்சி மாநாடு என்பதாக ஒரு மாநாடு கூட்டப் போவதாகவும், பத்திரிகைகளில் சேதியாகவும் அறிக்கையாகவும் வெளியாகி வருவதைப் பார்க்கிறேன்.


போரின் கடுமை இனிதான் அதிகரிக்கப் போகிறது

பெரும் போர்கள் இனிதான் நடக்க விருக்கின்றன

செஞ்சிலுவைக்கு

அதிக வேலை இருக்கிறது

எனவே,
தயவு செய்து இதை எண்ணிப்பார்த்து

★

மே. த. கவர்னரின்

யுத்த நிதிக்கு

('செஞ்சிலுவை' என்ற பெயரால்) மீண்டும்

தாராளமாகப்

பணங் கொடுத்துதவுங்கள்


ஆதலால், நான் இந்தப் பெரியோர்களின் இந்த அறிக்கையும் சேதியும் சவுத் இந்தியன் லிபரல் பெடரேஷன் என்று ஆங்கிலத்திலும் தென் இந்திய நல உரிமைச் சங்கம் என்ற பெயரோடு தமிழிலும் இருந்து வந்து சேலம் ஜஸ்டிஸ் கட்சி கான்பெடரேஷன் என்னும் மாநாட்டில் முறையே திராவிடியன் பெடரேஷன், திராவிடர் கழகம் எனப் பெயர் மாற்றப்பெற்று நடந்துவரும் ஜஸ்டிஸ் கட்சிக்கு சம்மந்தப்பட்டதல்லவென்றும் தெரிவிப்பதோடு, இந்தமாதிரி பெயர்களை உபயோகித்துக் கொண்டு தங்கள் கூட்டங்களை ஜஸ்டிஸ் கட்சி நிர்வாக சபைக் கூட்டமென்றும் சொல்லிக் கொண்டு இவ்வித நடவடிக்கை செய்ய அவர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லையென்றும் பொது மக்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஈ. வெ. ராமசாமி,
தலைவர் (ஜஸ்டிஸ் கட்சி)
திராவிடர் கழகம்,

ஈரோடு.
11-12-44

## தாழ்த்தப்பட்டோர் இளைஞர் கழகம்

மாயனூர் தாழ்த்தப்பட்டோர் இளைஞர் முன்னேற்றக் கழகக்கூட்டம் ஒன்று 9-11-44-ம் தேதி நடந்தது. தோழர் எம். பி. கல்லுசாமி அவர்களால் சமூக முன்னேற்றம் பற்றி சொற்பொழிவாற்றப்பட்டது. பின், டை சங்கத்தின் மாதாந்திர வரவு செலவு கணக்கு வாசிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது.

குடி அரசு

1944-ஆம் டிசம்பர்-மீ 16-உ

# ஜஸ்டிஸ் கட்சிக்குக் கிராக்கி புதுக்கட்சியா?

II

சென்ற வாரம் இதே தலைப்பின் ஜஸ்டிஸ் கட்சியை அது யாருடைய நலத்துக்கும் முன்னேற்றத்துக்குமாக ஏற்பட்டதோ அந்த மக்களை அடியோடு புறக்கணித்துவிட்டு, ஆனால் அந்த மக்களின் பெயரைச் சொல்லிக்கொண்டே தங்கள் சுயநலத்தை மாத்திரம் விரும்பி தங்கள் இஷ்டம்போல் பயன்படுத்திக்கொள்ள ஒரு கூட்டத்தினர் செய்யும் தொல்லையைப் பற்றியும், அப்படிப்பட்ட காரியம் அம்மக்களது தொல்லையும் முயற்சியும் வெற்றிபெற்றால் அந்த முயற்சி கட்சிக்கே கேட்டைத் தருவதாகும் என்பது பற்றியும் மற்றும் பல விஷயங்களையும் விளக்கி எழுதி இருந்தோம்.

இத்தொல்லையை இந்தக் கூட்டத்தார் விளைவிப்பதற்குக் காரணம் என்ன? என்பதை மக்கள் உணர்ந்துகொண்டால் பிறகு இவர்களது காரியங்கள் ஒவ்வொன்றுக்கும் உட்கருத்து தானாக விளங்கிவிடும். இக்கூட்டத்தார் இப்போது கிரமமாக இருந்து வரும் ஜஸ்டிஸ் கட்சியை (திராவிட கழகத்தை)ப் பற்றிச் சொல்லும் குற்றம் என்னவென்பதை பத்திரிக்கைகளில் அவர்கள் வெளிப்படுத்தி இருக்கும் சேதிகளைப் பொறுத்துப் பார்த்தால்,

'ஜஸ்டிஸ் கட்சியில் மதத்தைக் கொண்டுவந்து புகுத்தியிருப்பதால் அந்தக்கட்சி பயன்படாது' என்றும், "மதம், ஜாதி, சம்பந்தமான கொள்கைகள் இல்லாமல் வெறும் அரசியலைப் பற்றி மாத்திரம் ஜஸ்டிஸ் கட்சி இருக்கவேண்டும்" என்றும் சொல்லப்படுவதாகும்.

இதோடு சந்தர்ப்பம் கிடைத்த போது அவர்கள் மற்றொன்றும் சொல்லுகிறார்கள்.

அது என்னவென்றால்,

"சுயமரியாதைக் கட்சிக் கொள்கைகள் ஜஸ்டிஸ் கட்சியில் புகுந்துவிட்டன. ஆதலால் சுயமரியாதை வேறு, ஜஸ்டிஸ் கட்சி வேறு என்று இருக்கவேண்டும்" என்பதுமாகும்.

இந்த இரண்டு காரணங்களும் இவர் (இந்த கிளர்ச்சிக்காரர்)களுடைய உண்மையான உட்கருத்து அல்ல என்பதைத் திட்டமாகக் கூறுவோம். எப்படியெனில்,

மதத்தையும், ஜாதியையும் பற்றி பேசுவது ஜஸ்டிஸ் கட்சிக்கு ஒருநாளும் விரோதமானதென்று யாரும் சொல்லமாட்டார்கள். ஏனென்றால் "மக்களுக்குள் இருக்கும் ஜாதி பேதங்களை ஒழித்து ஒரே ஜாதியாக ஆக்கவேண்டும்" என்பதே ஜஸ்டிஸ் கட்சிக் கொள்கைகளில் ஒன்றாக ஆதிமுதலே இருந்து வருகிறது. அது காரணமாகத்தான் பார்ப்பனர் நீங்கிய மக்கள் எல்லாம் ஒரே ஜாதி என்று சொல்லி எல்லோரையும் சேர்த்து "நாம் பார்ப்பனர் அல்லாதார்" என்று சொல்லி சர்க்காரையும் அதை ஏற்றுக்கொள்ளச் செய்து வந்திருக்கிறோம்.

அதோடு மத விஷயத்திலும் நாம் இந்துக்கள் என்று சொல்லிக்கொண்டால் ஜாதிக்குக் கட்டுப்படவேண்டிவரும் என்றும், வருணாச்சிரம முறையை தவிர்க்க முடியாது என்றும் கருதியும், சட்டங்கள் முதலியவை ஜாதிகளை அடிப்படையாயும், அந்த ஜாதித்துவம் இந்துமதத்தை அடிப்படையாயும் கொண்டு இருப்பதாலும், அந்த இந்துமதத்துவம் ஆரிய தர்மத்தை (பார்ப்பனீயத்தை) அடிப்படையாகவும் கொண்டிருப்பதாலும், 'நாம் இந்துக்கள் என்று சொல்லிக்கொள்ளக்கூடாது' என்று 1938ல் சென்னை மாகாநாட்டிலும், 1940-ல் திருவாரூர் மாகாநாட்டிலும் பேசி தீர்மானமும்செய்திருக்கிறோம். 'திராவிடனுக்கு இந்து மதமும், ஜாதி பேதமும் இல்லை' என்று இதற்கு முன் இருந்த எல்லாத் தலைவர்களும், கட்சி பிரமுகர்களும், அபிமானிகளும் பேசியும் ஒப்புக்கொண்டுமிருக்கிறார்கள்.

உதாரணமாக, ஜஸ்டிஸ் கட்சி பிரசுரமாக கபிலர் அகவலை லட்சக்கணக்கில் அச்சுப் போட்டு பரிமாறி வந்திருக்கிறது.

மற்றும் உதாரணமாக—இந்தக் கிளர்ச்சிக் கூட்டத்தில் சேர்ந்த தோழர் சர் ஆர். கே. ஷண்முகம் அவர்கள் செட்டியார் என்கின்ற பட்டத்தை சேர்த்துக் கொண்டு இருந்தாலும் அவர் ஜாதியையும், மதத்தையும் ஒழிக்கும் சுயமரியாதைச் சங்கத்துக்குத் தலைவருமாவார். அவர் விருதுநகரில் ஒரு கூட்டத்தில் பேசும்போது,

"சுயமரியாதைக் கொள்கைகளை ஒப்புக்கொள்ளாத எந்தக் கட்சியிலும் நான் அங்கத்தினராக இருக்கமாட்டேன்"

என்றும், "காங்கரஸ் சுயமரியாதைக் கட்சியை எதிர்க்குமானால் நான் உடனே அதிலிருந்து விலகிவிடுவேன்" என்றும் காங்கரஸிலிருக்கும் போதே பேசியிருக்கிறார். தோழர் ராவ்பகதூர் வி. வி. ராமசாமி அவர்களும் சு.ம. கட்சியைச் சேர்ந்தவர் என்றே சொல்லிக்கொண்டு "அதைப்பக்தியோடு கடவுள் வாக்காகக் கொண்டு பின்பற்றுகிறவன் நான்" என்றும் நேற்றும் சொன்னவர். இந்நிலையில், ஜாதியோ மதமோ ஜஸ்டிஸ்கட்சியில் புகுந்ததுதான், இந்தப் பெரியார்களுக்கு இன்று அதிருப்திக்குக் காரணமாகப் போய்விடவில்லை என்று நிச்சயமாகவும், உறுதியாகவும் சொல்லுவோம்.

ஆனால் வேறு என்னவென்றால், அதுதான் யோசிக்கக்கூடிய காரியமாகும். தோழர் சர் ஆர். கே. எஸ். அவர்களோ, தோழர் சர் பி. டி. ராஜன் அவர்களோ, தோழர் இராமச்சந்திர ரெட்டியார் அவர்களோ, தோழர் ராவ்பகதூர் ஏ. துரைசாமி முதலியார் அவர்களோ தங்களை கிரமமான ஜஸ்டிஸ் கட்சியார் என்று சொல்லிக்கொள்ள வேண்டுமானால் அக்கட்சி தீர்மானப்படி முதலில் தங்களுடைய சர், பகதூர், C. B. E. முதலிய பட்டங்களையும், சேர்மென், ஜில்லாபோர்டு தலைவர், ரீஜனல் லீடர் முதலிய பதவிகளையும் கழட்டி வைத்துவிடவேண்டியதாகிவிடும். திராவிடநாட்டுப் பிரிவினையையும் ஒப்புக்கொள்ளவேண்டியதாகிவிடும். ஆகவே இதை இந்தப் பெரியார்களிடம் இருந்து எதிர் பார்க்க முடியுமோ என்றால் சூரியன் தவறிக் கீழே விழுந்தாலும் விழும் இந்தப் பட்டங்கள்

ராஜா முத்தையா

# திராவிடர் கழகத்திற்கு

## (ஜஸ்டிஸ் கட்சிக்கு)

### 16-12-44ம் தேதி வரை 17381-அங்கத்தினர்கள் ரூ. 2046—6—0 சந்தா

டிசம்பர் மாதம் 16ம் தேதி வரை திராவிட கழகத்திற்கு (ஜஸ்டிஸ் கட்சிக்கு) தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் இருந்து அங்கத்தினர் சேர்த்து தலைமை காரியாலயத்திற்கு அனுப்பப்பட்டிருக்கும் அங்கத்தினர் ஜில்லாவின் எண்ணிக்கையும் அவைகளுக்கான வருஷ சந்தா தொகையும் கீழே குறிப்பிட்டிருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. தஞ்சை | 3289 | 9. வட ஆற்காடு | 821 |
| 2. திருச்சி | 2657 | 10. மதுரை | 804 |
| 3. சேலம் | 2442 | 11. செங்கல்பட்டு | 488 |
| 4. கோவை, உதகை. | 1647 | 12. பெங்களூர் | 75 |
| 5 சென்னை | 1367 | 13. திருவிதாங்கூர், மலையாளம் | 62 |
| 6. இராமநாதபுரம் | 1333 | 14. புதுக்கோட்டை | 59 |
| 7. தென் ஆற்காடு | 1324 | 15. இலங்கை | 13 |
| 8. திருநெல்வேலி | 1000 | | |

ஆகமொத்த அங்கத்தினர்கள் 17381. சந்தா ரூ. 2046-6-0.

### 3 மாதத்துக்கு 17000 தானா?

டிசம்பர் மாதத்திற்குள் தமிழ் நாட்டில் 20000 அங்கத்தினர்கள் சேர்த்தாக வேண்டாமா?

செங்கல்பட்டும், வட ஆற்காடும் தூங்குகின்றதின் தன்மை பரிதபிக்கத்தக்கதாகும்.

மாநாடு நடந்த சேலம் மூன்றாவதாக இருப்பது பரிகசிக்கத் தக்கதாகும்.

---

பதவிகள் அவர்களிடமிருந்து நழுவி கீழே விழுவதென்றால் அவர்கள் ஜீவன் ஓப்பாது. ஆகையால் அவர்கள் ஜஸ்டிஸ் கட்சியைப் பற்றி ஏதாவது கலகம் செய்து கொண்டிருக்கவேண்டியது அவர்களுக்கு இன்றியமையாததாகப் போய்விட்டது என்பதில் அதிசயமில்லை என்போம்.

இவ்வளவு தானா என்றால், சரியான ஜஸ்டிஸ் கட்சியின் இன்னும் ஒரு 'தொல்லை' இருக்கிறது. அது என்னவென்றால்,

அதுதான் தற்காலம் "மந்திரி, அட்வைசர் முதலிய பதவிகள் ஒப்புக்கொள்ளக் கூடாது" என்று ஏற்கனவே 4 வருஷங்களுக்கு முன்னமே செட்டிநாடு அரண்மனையில் கூடிய ஜஸ்டிஸ் கட்சி நிர்வாகசபைக் கூட்டத்தில் செய்யப்பட்டிருக்கும் கண்டிப்பான தீர்மானமாகும். இந்தத் தீர்மானத்தை மாற்ற (கேன்சில் செய்ய) இந்தக் கூட்டத்தார் எடுத்துக் கொண்ட முயற்சி கொஞ்சநஞ்சமல்ல எனலாம். அது அவ்வளவையும் வெளியிடுவது அநாகரீகமாகக்கூட காணப்படலாம். அதற்கு ஆகவே ஒரு கூட்டம் தோழர் பி. பாலசுப்ரமணியத்தை வாங்கி கூடுமான காரியங்களையெல்லாம் செய்து பார்த்துவிட்டார்கள். முடியாதென்று தோன்றிய பின்பே "கட்சிக்கு நல்ல தலைவர் வேண்டும்", "அமைப்பு வேண்டும்" என்ற பல்லவியை நாமாவளியாகக் கொண்டு பஜனை பாடியவண்ணமிருந்தார்கள். இவ்வளவு மாத்திரமா என்றால் இன்னும் மேலே போனார்கள்.

அதென்னவென்றால் ஊர்ஊராக ஆள்களை அனுப்பி 'இன்று அட்வைசர்கள் வேலை நம் கைக்கு வந்துவிடக்கூடும். கவர்னர் பெருமான் அவர்கள், உங்கள்கட்சியின் உள்ள 'மந்திரி வேலை ஒப்புக் கொள்ளக் கூடாது' என்கிற தீர்மானத்தை மாற்றுங்கள் அல்லது வேறு தலைவரை ஏற்படுத்துங்கள் என்று சொல்லுகிறார், அந்தப்படி ஆகிவிட்டால் உங்களுக்கு ராவ்பகதூர், உங்களுக்கு திவான் பகதூர், உங்களுக்கு பப்ளிக் பிராசிக்கூட்டர், உங்களுக்கு அசிஸ்டெண்ட் பப்ளிக் பிராசிக்கூட்டர், உங்களுக்கு ஜில்லா ஜட்ஜு கொடுக்கப்படும், இதற்காக நாம் செய்யவேண்டியதெல்லாம் இந்தத் தலைவரை நீக்கி வேறு தலைவரை நியமித்து பழைய தீர்மானங்களை கேன்சில் செய்து விட்டால் போதும்' என்றுசொல்லி கூட்டம் சேர்க்க வேண்டியதும் அவர்களுக்கு அவசியமாயிற்று. இந்தப் பட்டம், பதவி, உத்தியோகப் பைத்தியம் இல்லாவிட்டால், இன்று உண்மையில் அதிலும் இந்தப் பெரியார்களுக்கு இன்று நியாயமாக இருக்கிற கட்சியை இல்லை என்றுசொல்லிவிட்டுதாங்கள்தான் ஜஸ்டிஸ் கட்சி என்று சொல்லிக் கொண்டு ஒரு கட்சியை நிருவ்கிக்க இவ்வளவு அக்கரையும், ஆத்திரமும் வர சிறிதுகூட அவசியம் இருக்க நியாயமே இல்லை என்கின்றோம். இதற்கு மற்றொரு ஆதாரமும் காட்டுகிறோம்.

அதாவது:

இந்தக் கூட்டத்தார் நம் ஜஸ்டிஸ் கட்சியைப் பற்றிக் குறைவாக இப்பொழுது தான் ஆதாவது பேர் மாற்றியதால் தான் செல்லாது என்றும், மதம், ஜாதி, கொள்கை சேர்த்ததால்தான் செல்லாது என்றும் சொல்லுவதானது உண்மையாய் இருக்கும் பட்சம் சுமார் 2-வருடத்துக்கு முன்னால் சர் பாத்ரோ அவர்கள் வீட்டில் இதே கூட்டத்தார் சேர்ந்துகொண்டு கட்சியைக் கைப்பற்றவும் தீர்மானங்களை மாற்றவும் மாநாடு நடத்த வேண்டுமென்றும் பல தந்திர முறைகள் கையாளவேண்டிய அவசியம் என்ன வந்தது என்பதும், அதற்குத் தோழர் பாலசுப்பிரமணியத்தை காரியஸ்தராக நியமிக்க அவசியம் என்ன வந்தது என்பதும் நமக்குப் புரியவில்லை. அன்றியும் இதே தோழர் பாலசுப்பிரமணியமும் இரண்டொரு சென்னை வகீல்களும், திவான்பகதூரும்சேர்ந்துகொண்டு சென்னையில் கட்சித் தலைவர் பெரியார் ராமசாமியால் திறக்கப்பட்டு கட்சிக்காரியதரிசி தோழர் அண்ணாதுரை தலைமைவகித்த ஜஸ்டிஸ்கட்சி மாநாட்டைப்போலி ஜஸ்டிஸ் கட்சி மாநாடு என்றும்

சேலத்தில் கூடிய ஒரு நிர்வாக சபைக் கூட்டத்தை அதாவது, இதே தோழர் ராவ்பகதூர் துரைசாமி முதலியாரும், அவர் தம்பி குமாரர் டாக்டர் கிருஷ்ணசாமியும், சர் குமாரராஜா, தோழர் செட்டோ அவர்களும் நிர்வாகக் கமிட்டி மெம்பர்களாய் இருந்து நடத்திய நிர்வாகக்கமிட்டிக் கூட்டத்தை போலிக்கூட்டம் என்றும், கோரமற்ற கூட்டமென்றும் கூறக் காரணம் என்ன? இவர்கள் அப்பொழுதாவது அந்த மெம்பர்கள் கணக்கையாவது சட்டத்தையாவது வெளியிட்டார்களா? என்றெல்லாம் பார்த்தால் இந்தக் கூட்டம் சிறிது காலமாகவே தந்திர யோசனை செய்து வந்ததும், எப்படியாவது மந்திரியாகவோ, அட்வைசாராகவோ, வைசிராய் நிர்வாக சபை மெம்பராகவோ ஆகத் தவம் கிடந்ததும், அதற்குப் பெரியார் முட்டுக்கட்டையாய் இருந்து வந்ததும் தான் இவர்களின் இன்றைய முயற்சிக்கு முழுக் காரணம் என்பது கடுகளவு அறிவுள்ளவர்களுக்கும் விளங்காமல் போகாது என்பதுடன்,

நாமும் இவர்களுடைய இப்படிப்பட்ட ஆசைக்கு சிறிதாவது 'குறுக்கே கிடக்கிறோம்' என்கின்ற பெயர் வாங்க ஆசையும் இருக்காது.

ஏனெனில் ஜஸ்டிஸ் கட்சியானது இதர காங்கிரசைப் போல பட்டம், பதவி, உத்தியோகம் இவைகளுக்கு மாத்திரமல்ல என்பதோடு அவற்றின் பற்றும் கவலையும் உள்ளவர்களுக்கு மாத்திரம் சொந்தமானது அல்ல என்பதை நாம் விவரிக்க வேண்டியதில்லை; மற்றும் யாருடையது என்றால் சரித்திரப் பெருமைபெற்ற பழங்குடி மக்களான 5-கோடி திராவிட மக்களை சேர்ந்த கட்சியாகும். அதுவும் இந்த நாட்டை ஆண்ட பழம்பெருங் குடிமக்கள் இன்று தாழ்ந்த ஜாதியாய், தொடாத ஜாதியாய் பொதுவாழ்வில், ஆட்சியில், சட்டத்தில் சமஉரிமை இல்லாத இழி ஜாதியாய் மதிக்கப்பட்டு நசுக்கப்பட்டு சிறு மீன்களைப் பெருமீன்கள் தின்பதுபோல இந்த நாட்டு பழங்குடிமக்களிலேயே ஒருவரை ஒருவர் இகழ்ந்தும், காண்டியும் போட்டிபோட்டு அன்னியனுக்கு அடிமையாகவும், மொத்தத்தில் "தாசி மக்களாக"வும் வாழும் 5 கோடி மக்களைச் சேர்ந்ததாகும். அப்படி இருக்க இப்படிப்பட்ட ஒரு பொறுப்புள்ள கட்சியை தோழர் பி. பாலசுப்பிரமணியம், ராவ்பகதூர் எ. துரைசாமி முதலியார், சர் ஆர். கே. ஷண்முகம் செட்டியார் முதலியவர்கள் ஆதிக்கத்தில் விடுவது சரியா என்பதுதான் இன்றைய தினம் இந் நாட்டுமக்கள் சிந்திக்கவேண்டிய காரியமாகும். இந்தக்கூட்டத்தார் தங்களைத்தவிர வேறு யாருடைய ஆதரவைக் கொண்டு வேறு யாருக்காகப் பேசுகிறார்கள் என்பதை இவர்களின் எந்தக் கூட்டத்தின் நடவடிக்கையினாலாவது, பேச்சினாலாவது ஜாடையாவது காட்டினார்களா? மக்களுக்குத் தெரிந்துகொள்ளவாவது முடிந்ததா? கடைசியாக இவர்களுடைய கொள்கை என்ன என்றாவது எதிலாவது காட்டினார்களா? என்றால், அது;

சேலம் மாநாடு நடந்த உடன் அதிலும் சேலம் மாநாட்டில் "சர்க்கார் ஜஸ்டிஸ் கட்சியாலும், ஜஸ்டிஸ் கட்சி தலைவராலும் தங்களுக்குத் தேவையான காரியங்களையெல்லாம் சாதித்துக்கொண்டு அந்தக் கட்சியைப் பற்றி மதிக்காமல் அதைக் குலைக்கும்படியான காரியம் செய்கிறார்கள்" என்று தீர்மானம் செய்த உடன் நாணயமும், ஒழுக்கமும் அற்ற முறையில் ஒரு கூட்டத்தை வெகு பந்தோபஸ்தாகக் கூட்டிக்கொண்டு அதில் சர்க்காருக்கு நன்றியும், சர்க்கார் ஏஜண்டுக்கு பக்திவிஸ்வாசமும் வாழ்த்தும் கூறி தீர்மானித்து சர்க்கார் ஏஜண்டுக்குக் காணிக்கை சமர்ப்பித்து தீர்த்தப் பிரசாதம் கேட்டதைத் தவிர வேறு இவர்களுடைய கொள்கை அல்லது திட்டம் என்ன என்று யார்தான் சொல்ல முடியும் என்று கேட்கிறோம்.

பணம் இருந்தாலே எல்லாக் காரியத்தையும் சாதித்துவிடலாம் என்கின்ற எண்ணமும், எல்லாப் பிழைப்புக்காரர்களை கைவசப்படுத்திக்கொண்டாலே நாங்கள் தலைவர்களாகி விடலாம் என்கின்ற எண்ணமும் ஒழிக்கப்படுவதும் இந்த மாதிரி காரியங்களுக்கு வெற்றி ஏற்படாமல் செய்வதும் ஒரு நாட்டிக்கு சமதர்மத்தைவிட சிறந்த தொண்டாகும் என்பது நமது ஆழ்ந்த கருத்தாகும்.

அதிலும் இந்த கலகக்காரப் பெரியார்கள் இம்மாதிரி காரியங்களில் பல வழிகளில் அனுபவப்பட்டிருந்தும் தங்கள் பணப்பைகளை நினைத்துக்கொண்டு இந்தக் காரியத்தில் இறங்கி இருப்பது மகா தைரியமான காரியம் என்றுதான் சொல்லவேண்டும்.

அதிலும் இக்கூட்டத்தார் தாங்கள் யாரை நம்பி—யாருடன் சேர்த்துகொண்டு இந்த காரியத்தைச் செய்கிறார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்த்தால் தங்கள் எதிர்காலம் தங்கள் கண்களுக்குத் தென்படாமல் இருக்காது. என்றாலும் அரசாங்கத்தின் தயவும் பார்ப்பனப் பத்திரிகைகள் தயவும் தங்களுக்கு தாராளமாகக் கிடைக்குமென்று எதிர்பார்க்கிறார்கள் போல் தெரிகிறது.

எர்ஸ்கின் பிரபு அரசாங்கம் ஆச்சாரியாரின் டிக்கட் பாக்கெட்டில் இருந்தது. அவர் உள்பட அவரோடு இருந்தவர்கள் பலதடவை ஜெயிலுக்குப் போனதோடு பெரிய தியாகம் செய்தவர்களுமாவார்கள். அதோடு மகா புத்திசாலிகளும் கூட, அதோடு தேசிய பத்திரிகைகளின் ஆதரவும் இருந்தன. அப்படி இருந்தும் அந்த ஆட்சித் தலைவர் போலீஸ் பந்தோபஸ்தோடு காரிலிருந்து இறங்கி வந்து 10 நிமிஷம் பேசிவிட்டு ரிசர்வும் குதிரைப் படையும் புடைசூழ பந்தோபஸ்துடன் வளையத்தில் வந்து கார் ஏறி வேகத்தில் விட்டார் என்றால், மற்றும் பல கூட்டங்களில் குட்டிச்சுவரை எட்டிக் குதித்து வீடு வந்து சேர்ந்தார்கள் என்றால், இந்தக் கூட்டத்தார் இந்த சர்க்காரை நம்பி மந்திரி பதவி பெற்றாலும் அவர்களைவிட மேலாக வாழ்ந்துவிட முடியும் என்று கருதுகிறார்களா? என்று கேட்கிறோம். மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்குகிறார்கள் என்பதைத் தவிர வேறு ஒன்றும் நம்மால் சொல்ல முடியவில்லை. என்றாலும், அவர்கள் முயற்சியில் வெற்றிபெற்றால் அவர்கள் வீரர்களே யாவார்கள். ஏனெனில் எவ்வளவோ பெரிய உண்மை உணர்ச்சியும், ஆதரவும், 20000 அங்கத்தினர்களும், யாவற்றுக்கும்

ஜா முத்தையா

துணிந்த ஆயிரக்கணக்கான தொண்டர்களும், நாடு முற்றும் செல்வாக்கும் உள்ள ஒரு கட்சியை (கிரமமான ஜஸ்டிஸ் கட்சியை) இல்லாமல் செய்துவிட்டு மிதவாதிகளைப் போல் தங்களைத் தவிர வேறு யாருமற்ற ஒரு சிலர் புது ஜஸ்டிஸ் கட்சியாகி மந்திரி பதவி பெற்று அதை நிலை நிறுத்திக் கொண்டார்கள் என்றால் அது மிகவும் மிகவும் வீரத்தனமான காரியமேயாகும் என்பதில் என்ன ஐயமிருக்கமுடியும்?

## நம் சி. டி. நாயகம் முடிவெய்தினார்

நம் அன்பர் ஆருயிர்த் தோழர் சி. டி. நாயகம் முடிவெய்திவிட்டார். இனி அவரது இடத்தைப் பூர்த்தி செய்ய ஆள் இல்லை என்கின்ற நிலையில் உண்மையாய் உழைத்து வந்த உத்தமர் மறைந்தார்.

எளிய வாழ்க்கை உள்ளவர் அதனால் மீதப் பணத்தையெல்லாம் கல்விக்குச் செலவு செய்தவர், நினைப்பது போல் பேசுபவர், பேசுவது போல் நடப்பவர்.

ஆவலோடு கண்களை மூடிக்கொண்டு பெரியாரைப் பின்பற்றி வந்தவர். ஆனால் பெரியாருக்கும் அவருக்கும் எந்த விஷயத்திலும் ஒன்று போலவே கருத்து உதிக்கும். பெரியார் கருத்தைச் சொல்லிவிட்டால் நாயகம் பெரியாருக்கு மேலாக அதை விளக்கிச் சொல்லுவார். அதற்கு ஆதாரங்கள் வினாடியில் சேகரித்துவிடுவார்.

எந்தப் பதவியும், உத்தியோகமும், செய்யும் தொண்டும் தமிழ் மக்களுக்குப் பயன்படுத்த முடியாவிட்டால் அது எவ்வளவு பெரியதாயினும் திரும்பியும் பாரார். உண்மையில் கண்ணியமானவர். வேஷத்திற்கு என்று நடக்கும் காரியம் அவரிடம் எதுவும் இருந்ததில்லை. அப்படிப்பட்ட பெரியார் முடிவெய்தினது நமக்கு மகா பெரும் நட்டமென்றே சொல்லுவோம். அதுவும் பரிகரிக்க முடியாத நட்டமென்றே சொல்லுவோம்.

அவரது குடும்பத்தார் பகுத்தறிவு வாதிகளானதால் அவர்களுக்கு எங்களுடைய ஆறுதலும் தேவை இருக்காதென்றே கருதுகிறோம்.

தமிழ் மக்கள் ஆங்காங்கு கூட்டம் கூட்டி அவரது அனுதாபத்தை அக்குடும்பத்தாருக்கு தெரிவித்துக்கொள்ள வேண்டுகிறோம்.

நாயகம் ஐயா அவர்களைப் போலவே இருந்து உழைத்துவந்த அவரது வாழ்க்கைத் துணைவியார் தோழர் சிதம்பரம் அவர்கள் ஐயா அவர்கள் விட்டுப்போன காரியங்களை பின்தொடர்வார்கள் என்ற உறுதி நமக்கு உண்டு.

## தென்னாட்டுக்கு டாக்டர் அம்பேத்கார்

சென்னை ஜில்லா ஷெடியூல்ட் வகுப்பு பெடரேஷன் காரியதரிசி தோழர் எம். எஸ். மூர்த்தி எழுதுவது:

டாக்டர் பி. ஆர். அம்பேத்காரின் தென்னாட்டு சுற்றுப்பிரயாணமும் பங்களூர் கோலார் விஜயமும் ஜனவரி 15-ந் தேதிக்கு மேல் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக செய்தி வந்துள்ளது. தமிழ்நாட்டிலுள்ள ஷெடியூல்ட் வகுப்பு சங்கங்கள் தங்கள் பல்வேறு சமூகப் பெயர்களை மாற்றி ஷெடியூல்ட் வகுப்பு பெடரேஷன் என்று அமைத்து டாக்டர் அம்பேத்காரின் விஜயத்தை வெற்றிகரமாகச் செய்யக் கோரப்படுகிறார்கள். அவரை வரவேற்க விரும்பும் சங்கங்கள் உடனே எங்களுக்கு தெரிவித்தால் அதற்கு வேண்டிய ஏற்பாடும் சுற்றுப் பிரயாண நிகழ்ச்சியும் இடமும் குறித்து தெரிவிக்கப்படும். சென்னையிலும் ஒரு மாபெரும் கூட்டம் சிறப்பாக நடைபெற ஏற்பாடு செய்துள்ளோம். நமது குறிக்கோள் வெற்றிபெற்று உரிமையை நிலைநாட்ட சமூகத் தோழர்கள் ஒன்றுபடக் கோருகிறேன். போலி சமூகத் தலைவர்களாக பாசாங்கு செய்து பதவிக்காக ஆசைப்படுபவர்களை நம்பி மோசம் போகாதிருக்கும்படி வேண்டுகிறேன். தாங்கள் பதவி பெறுவதற்காக சமூகத்தைக் காட்டிக் கொடுத்து ஹரிஜன் என்ற பெயரை தாங்கள் வெட்கமில்லாமல் சூட்டிக்கொண்டதுமில்லாமல் நமக்கும் சூட்டுவதை இன்னும் நீங்கள் கேட்டும் பார்த்தும் கொண்டுதானிருக்கிறீர்கள். உணர்ச்சியுடன் இவைகளை வேருடன் களையவேண்டின் டாக்டர் அம்பேத்காரின் சுற்றுப் பிரயாணத்தில் வெற்றிமாலை சூட வரவேற்க வாரீர். சங்கங்களின் விலாசமும் ஏற்பாடு செய்வதின் முழு விவரமும் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பவும்.

விலாசம்: எம். எஸ். மூர்த்தி, காரியதரிசி, சென்னை ஜில்லா ஷெடியூல்ட் காஸ்ட் பெடரேஷன், நெ. 8. போர்ச்சுகீஸ் சர்ச் தெரு, ஜி. டி. சென்னை.

## பெரியார் ஈ. வெ. ரா. சுற்றுப்பிரயாணம்.

பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் தமது சகாக்களுடன் 17-12-44ந் தேதி காலை சேலம் வேலூரைச் சேர்ந்த பொத்தனூருக்குப் புறப்பட்டுச் செல்லுகிறார்.

## அறிவிப்பு

தோழர் சி. டி. நாயகம் அவர்கள் முடிவெய்திய செய்தியும் அனுதாபமும் வெளியிட நேர்ந்தமையால் மற்றச் செய்திகள் நிறுத்தி வைக்க நேர்ந்தது. அவை அடுத்த இதழில் வரும். — ஆசிரியர்

## இராயபுரம் திராவிடக் கழகத் திறப்பு விழா

இராயபுரம் 2-வது வட்ட திராவிடர் கழகத்தின் திறப்பு விழா 17-12-44-ந் தேதி காலை 9 மணிக்கு இராயபுரம் போலீஸ் ஸ்டேஷனுக்கு அடுத்த மரத்தொட்டியில் டாக்டர் இருதயநாதன் தலைமையில் தோழர் எஸ். ராமநாதன் எம். ஏ., பி. எல்., அவர்களால் ஆற்றிவைக்கப்படும். தோழர் டி. ஷண்முகம் அவர்கள் கொடியேற்றுவார். தோழர்கள் ஜெ. எஸ். கண்ணப்பர், அன்பழகன், என். ஜீவரத்தினம், என். வி. நடராஜன் முதலியவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

## வருந்துகிறோம்

சென்னை நகர் பிரபலஸ்தரும் தோழர் கே. எம். அருணாசல நாடார் அவர்களின் தமையனும், காரியத்தில் பேரன்புகொண்டவரும் O. K. S & Co. தண்டபாணி வில்லன் ஜின்னிங் பாக்டரி பழனி பிராஞ்சு ஏஜண்ட் முதலியவைகளின் கூட்டாளியுமான தோழர் டி. கே. முத்தையா நாடார் அவர்கள் தமது 61-வது வயதில் திடீரென மாரடைப்பால் 28-11-44-ஆம் தேதி காலமானார் என்பதை பற்றி வருந்துகிறோம். அன்னாரின் மறைவைக் குறித்து வருந்தும் புதல்வர்களுக்கும், குமாரத்திகளுக்கும் எங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாருக்காக இறுதிச் சடங்கு 13-12-44-ஆம் தேதி பழனியில் நடைபெற்றது.

கொழும்பு 'குடி அரசு' ஏஜெண்ட் சொக்கலிங்கரால் 'குடி அரசு' வளர்ச்சிக்கு ரூ. 1. நன்கொடையளிக்கப்பட்டது.

## இளைப்புதுக்கல்லா சிங்கக் கூட்டம்!

'குடி அரசி'ன் முரசொலியைக் கேட்டு பல மாணவர்கள் ஆர்வமுடன் ஆவன செய்வோம் என முன்வந்துள்ளனர். விடுமுறை நாட்கள் நீண்டிருக்கக் கூடாதோ என்ற ஏக்கம் தக்க திட்டமமைக்கத் தடையாயிருக்கின்றது. எனினும் சில மாவட்டங்களுக்கு மாணவர் குழுக்களை அனுப்புகிறோம். ஆதரவு இருக்கும் என்ற நம்பிக்கை மிக உண்டு. எங்கே, எந்த எந்த ஊர்கள் கூட்டங்கள் கூட்டத் தயாராயிருக்கின்றன பார்ப்போம்; விரைவில் விடையளியின் விரைவில் மாணவர் வருவர். 20-ந் தேதியன்றே கூட்டங்களை நடத்தத் தொடங்கி விடலாம். கீழ்க்கண்ட பகுதிகளும், மாணவர் குழுக்களும் தயாராயுள்ளன; தடை செய்யாது விடை எழுதின் மடை திறந்தது போல் படை திரண்டு வரும்.

மதுரை திருநெல்வேலி மாவட்டங்களுக்கு தோழர்கள் வ. பி. ஜனார்த்தனம் பி.ஏ., தலைமையில் எஸ். தவமணிராசன், து. ராமையா முதலிய மாணவர்களும், இராமநாதபுரத்துக்குப் புலவர் நா. மு. மாணிக்கம் தலைமையின் கீழ் இரா. வில்லாளன், சா. க. சம்பந்தம் முதலியோரும், திருச்சி மாவட்டத்துக்கு தோழர்கள் த. மா. பெரியசாமி தலைமையில், கோ. இரத்தினவேல், வை. நன்மாறன் ஆகியோரும், சேலத்துக்கு தோழர்கள் இ. தியாகராசன் தலைமையில் இளவழகன், வீரமணி ஆகியவர்களும், கோயமுத்தூர் மாவட்டத்துக்கு தோழர்கள் கபார் தலைமையில், முனிசாமி சுப்பிரமணியன் முதலியவர்களும், தென்னார்க்காடு மாவட்டத்துக்கு தோழர்கள் ப. வெற்பரசன் தலைமையில், வி. நடராசன், மு. திராவிடமணி, தமிழ் ஒளி ஆகியோரும், மற்றொரு பகுதிக்கு தோழர் டி. சி. எஸ். மணியன் தலைமையில் தோழர்கள் நக்கீரன், இரணியன், சாமிநாதன் என்னும் மாணவர்களும் செல்வதாக ஏற்பாடாகியிருக்கிறது.

தத்தம் ஊர்களில் கூட்டம் அமைத்து 20-12-44க்குள் எமக்குக் கடிதம் வரையுமாறு இயக்கத் தோழர்களைப் பணிவன்புடன் வேண்டுகிறோம். காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ளுவோம். ஓடி வருவீர் தோழர்களே!

செயலாளர்,
திராவிட மாணவர் பிரசாரக் கழகம்,
ஈரோடு.

---

அத்திக்கடை மேலச்சண்முகபுரம் தோழர் நா. சுப்பையாவால் 'குடி அரசு' வளர்ச்சிக்கு ரூ 1. நன்கொடையளிக்கப்பட்டது.

## பட்டுக்கோட்டை திராவிடர் கழகம்

(நமது நிருபர்)

பட்டுக்கோட்டை, டிச. 13—

சென்ற 10-12-44-ந் தேதி இரவு 10 மணிக்கு கழகத் தலைவர் தோழர் கே. எஸ். சிவராம கிருஷ்ணன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்வூர் திராவிடர் கழக கமிட்டிக் கூட்டத்தில், சென்ற நவம்பர் முடிய இக்கழக சார்பில் 599 அங்கத்தினர்கள் சேர்க்கப்பட்டதை ரிக்கார்டு செய்தும், டிசம்பர் மாத முடிவுக்குள் மொத்த அங்கத்தினர் தொகை 1000-க்கு அதிகமாக ஆக்குவதற்கு இயக்கத் தோழர்கள் முயற்சி எடுத்துக்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

## பொத்தனூர் திராவிடர் கழக திறப்பு விழா

10-12-44 ஞாயிறன்று கூடிய திராவிடர் கழக அமைப்புக் கூட்டத்தில் க. சிவப்பிரகாசம் தலைவராகவும், ஆ. தியாகராசன் துணைத் தலைவராகவும், க. சண்முகம், ஆ. முத்துசாமி செயலாளர்களாகவும், ம. சு. நடேசன் பொருளாளராகவும், இன்னும் செயற் குழு ஒன்றும் நிறுவப்பட்டது. திறப்பு விழாவிற்கு பெரியார், அண்ணாதுரை, ஜனார்த்தனம், நெடுஞ்செழியன், திராவிடமணி முதலியோரை அழைத்துவரத் தீர்மானிக்கப்பட்டது.

## கோட்டாறு சுயமரியாதை வாசிப்புச் சாலை

28-12-44 வியாழனன்று மாலை 5 மணிக்கு கோட்டாறு ராமச வீதியில் தோழர்கள் கெ. அன்பழகன் பி. ஏ., (ஆனர்ஸ்) இரா. நெடுஞ்செழியன் பி. ஏ., (ஆனர்ஸ்) வ. பி. ஜனார்த்தனம் எம். ஏ. வகுப்பு மாணவர் பச்சையப்பன் கல்லூரி, சென்னை, முதலியவர்கள் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள். தமிழர் கலை, மொழி, நாகரீகம் முதலியவையே பற்றி பேசப்படுமாதலால் தோழர்களும், மாணவர்களும் திரண்டு வரவேண்டுகிறேன்.

நேசம்,
எஸ். பூதலிங்கம், எ. குமாரவேல்,
செயலாளர்கள்

## ஷெடியூல்டு வகுப்பு கிறிஸ்தவர்கள் குறை

### டாக்டர் அம்பேத்காருக்கு முறையீடு

திருச்சி ஷெடியூல்டு வகுப்பு கிறிஸ்தவர்கள் சார்பாக தோழர் எஸ். பிரான்சிஸ், வைஸ்ராய் நிர்வாகக் கவுன்சில் மெம்பர் டாக்டர் அம்பேத்கார் அவர்களுக்கு ஒரு நீண்ட முறையீடு அனுப்பியுள்ளார். அதில், ஷெடியூல்டு வகுப்பாருக்கும், ஷெடியூல்டு வகுப்பு கிறிஸ்தவர்களுக்கும் மத நம்பிக்கையைத் தவிர இதர வகைகளில் எத்தகைய வேற்றுமையுமில்லையென்றும், இவர்கள் உயர் ஜாதி கிறிஸ்தவர்களுக்கும், ஹிந்துக்களுக்கும் அடிமையாகவிருந்து துன்புற்று வருகிறார்கள் என்றும் ஆதாரப்பூர்வமாக எடுத்து விளக்கித் தக்க பரிகாரம் அளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

## கோவை திராவிடர் கழகம்

8-12-44-ந் தேதி கோவையில் தோழர் ஜெ. எஸ். கண்ணப்பர் தலைமையில் கோவை திராவிடர் கழக கட்டிடத்தில் நடந்த கூட்டத்தில், ஜனவரியில் கோவைக்கு வரும் டாக்டர் அம்பேத்கார் அவர்களுக்கு கழகத்தின் சார்பில் நல்வரவேற்பிதழ் வாசித்துக் கொடுப்பதென்றும்; ஜனவரிமாதம் மூன்றாம் வாரத்தில் இக்கழகத்தின் சார்பில் முதலாவது திராவிடர் மாநாடு நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. மாநாட்டிற்கு நிதி வசூல் செய்ய 7 பேர் கொண்ட கமிட்டி ஒன்று நிறுவப்பட்டது. கழகத்திற்கு துணைத் தலைவராக தோழர் பி. அருணாசலம் அவர்களும் பொருட்காப்பாளராக தலைவர் தோழர் கண்ணப்பர் அவர்களும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

## "சிவஞானர்"

சென்னை சௌந்தர்ய மகாலில் 23-12-44-ந் தேதி "சிவஞானர்" என்னும் சமூக சீர்திருத்த தமிழ் நாடகம் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் தலைமையில் நடைபெறும்.

## ஈரோடு தாலூகா திராவிடர் மாநாடு

சென்னிமலையில் ஓர் திராவிடர் கழகம் நிறுவி அக்கழகத் திறப்புவிழாவையும் ஈரோடு தாலூகா திராவிடர் மாநாட்டையும் நடத்த ஏற்பாடுகள் செய்துகொண்டு வருவதாலும், அவ்வமயம் நம் இயக்க தலைவர்களை அழைத்து மாநாட்டை சிறப்புற நடத்தவேண்டியிருப்பதாலும் இதைக் காணும் தோழர்கள் தங்களால் இயன்ற பண உதவியை கீழ்காணும் முகவரிக்கு அனுப்பித்தர வேணுமாய்க் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

முகவரி:

தி. க. அமைப்பாளர்கள்,
சென்னிமலை

# திராவிடக் கழகங்கள்

### சீர்காழி

20-11-44-ல் சீர்காழி திராவிடத் தோழர்கள் சார்பில் வ. பி. ஷம். எஸ். ராஜன் தலைமையில் திராவிடர் கழக அமைப்புக் கூட்டம் மாலை 5-30 மணிக்கு நடைபெற்றது. அவ்வமயம் பஞ்சாயத்து போர்டு வைஸ்பிரஸிடெண்ட் தோழர், என். ஜி. சொக்கலிங்கம் அவர்கள் திராவிடர் கழக அமைப்பின் அவசியத்தைப் பற்றியும் வருங்கால நிலை என்பது பற்றியும் மிகவும் விரிவாக சொற்பொழிவாற்றினார். அதுசமயம் தோழர்கள் என். இளவரசு, சம்பந்தம், சமச்சிவாயம், முதலியவர்கள் தற்கால யுத்தமும், நமது கடமையும் பற்றிப் பேசினார்கள்.

### திருவண்ணாமலை

12-10-44-ம் தேதி திருவண்ணாமலை தென் இந்திய நலவுரிமைச் சங்க மெம்பர்களின் கூட்டம் தோழர் ஆ. மு. பாலகிருஷ்ண முதலியார் அவர்கள் தலைமையில் கூடியது. அதுசமயம் சேலம் மாகாண மாநாட்டின் தீர்மானத்தை ஆதரித்து தென் இந்திய நலவுரிமைச் சங்கமென்பதை திருவண்ணாமலை டிவிஷன் திராவிட கழகம் என பெயர் மாற்றியமைப்பதென தீர்மானிக்கப்பட்டது.

மேற்படி கழகத்திற்கு தோழர்கள் குப்பரெட்டியார் (சிக்கநூர்) தலைவராகவும், ஆ. மு. பாலகிருஷ்ண முதலியார் (ஜவுளி திருவண்ணாமலை) காரியதரிசியாகவும், சித்தரெட்டியார் (தண்டராம்பட்டு) தனாதிகாரியாகவும், மற்றும் 8 பேர்கள் கமிட்டி மெம்பர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டது. மொத்தம் 80 அங்கத்தவர்கள் சேர்ந்திருக்கிறார்கள் என்று மேற்படி காரியதரிசி தெரிவிக்கிறார்.

* *

15-11-44 புதன்கிழமை மாலை 4 மணிக்கு அவ்வூர் தெரு கம்மவார் மடத்தில் திருவண்ணாமலை டிவிஷன் திராவிடர் கழக காரியதரிசி ஜவுளி பாலகிருஷ்ண முதலியார் அவர்கள் தலைமையின் கீழ் கழக அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. திருவண்ணாமலை திராவிடர் கழகத்திற்கு தோழர்கள் எஸ். முருகைய முதலியார் தலைவராகவும், கே. என். வடிவேல் பிள்ளை உபதலைவராகவும்; எ. பெருமாள் காரியதரிசியாகவும், ஜே. டி. தம்புசாமி உபகாரியதரிசியாகவும், பி. லையாபுரி பொருளாளராகவும் நியமிக்கப்பட்டு மற்றும் 9 அங்கத்தினர்களை கமிட்டி அங்கத்தினர்களாகச் சேர்க்கப்பட்டது.

சேலத்தில் நடந்த 16 வது மாகாண மாநாட்டின் தீர்மானங்களை இக்கழகம் முழுமனதுடன் ஆதரித்து, அத்தீர்மானப்படி இக்கழகம் கட்டுப்பட சம்மதிக்கிறது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

கழகம் மந்தாரங்குளத் தெருவில் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டு தலைவர் முடிவுரையுடன் கூட்டம் இனிது முடிந்தது.

### கிருஷ்ணகிரி

26-11-44-ல் 'ஜண்டிஸ் கிளப்' கட்டிடத்தில் தோழர் வி. எஸ். கோதண்டராம் அவர்கள் தலைமையில் 'திராவிட இளைஞர் கழகம்' ஒன்று நிறுவப்பட்டது. இக்கழகத்திற்கு தோழர்கள் ஜி. ஆர். மோகன்ராம் தலைவராகவும், எஸ். எஸ். லட்சுமிபதி காரியதரிசியாகவும், மற்றும் 5-உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவ்வமயம் மாணவர்கள் ஆர். எம். ராதாகிருஷ்ணன், பி. காசி விசுவலிங்கம் "திராவிட இளைஞர்களின் கடமை" என்பது பற்றி பேசியும், சேலம் மாநாட்டின் கொள்கைகளை ஆதரித்தும், பெரியார் ஈ.வெ.ரா. அவர்களின் சேவைகளைப் பாராட்டியும், அவர்களின் கட்டளைக்கு தாங்கள் எப்பொழுதும் தயாராக இருக்கப்போவதாகவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### சாக்கோட்டை

கும்பகோணத்தையடுத்த சாக்கோட்டையில் தோழர் கே. கணபதி அவர்களைத் தலைவராகவும் மற்றும் 10 பேர்களைக்கொண்ட திராவிட கழக நிர்வாகக் கமிட்டி 19-11-44-ல் அமைக்கப்பட்டது. இவ்வூரில் இதற்கு முன் இருந்த தெ. இ. ந. உரிமைக் கிளைச் சங்கத்திற்கு சேலம் மாநாட்டின் தீர்மானத்திற்கிணங்க "திராவிட கழகம்" எனப் பெயரிடப்பட்டது.

சேலம் மாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்களை இத் திராவிட கழகம் ஒப்புக்கொள்கிறது என்றும் பெரியாரின் சேவையையும், தலைமையையும் திராவிட மக்கள் ஒப்புக்கொள்கின்றனர் என்பதற்கறிகுறியாக இன்னும் ஏராளமான அங்கத்தினர்கள் திராவிட கழகத்தில் சேரவேணுமாய் கோருகிறது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

### தஞ்சை

2-12-44 அன்று மாலை 7-மணிக்குத் தஞ்சை திராவிட மாணவர் கழகச் சார்பில், தோழர் என். எஸ். தன்முகவடிவேல் தலைமையில் ஒரு சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் தோழர்களான அமிர்தலிங்கம், இரா. சந்தானம், எஸ். எம். வாசகம், எ. சு. மணியம் ஆகியவர்கள் முறையே, "பாசறையின் கண்ணே", "மாணவர் நிலை", "குமுறும் நெஞ்சம்", "எதிரொலி" என்பது பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள். தலைவர் முடிவுரை கூறிய பின், இன்பவடிவன் நன்றி கூறலுடன் இரவு 9-30 மணிக்குக் கூட்டம் முடிந்தது.

## தஞ்சை புகைவண்டி நிலையத்தில் பெரியார்

3-12-44ம் தேதி காலை 11-மணி சுமாருக்கு பெரியார் அவர்கள் நாகையிலிருந்து தஞ்சை வந்து இறங்கினார்கள். தஞ்சை திராவிட இளைஞர்களும் மாணவர்களும் வரவேற்றார்கள். இரண்டாவது வகுப்பு பிரயாணிகள் தங்குமிடத்தில் பெரியார் அவர்கள் தங்கியிருந்தார்கள். அக்காலை பெரியார் திராவிட மாணவர்களுடனும் இளைஞர்களுடனும் சுமார் 1½-மணிநேரம் பேசி அளவளாவிக் கொண்டிருந்தார். பிறகு மாலை 2-மணி வண்டிக்கு ஈரோடுநோக்கி பிரயாணமானார். புகைவண்டி நிலையத்தில் இளைஞர்களும், மாணவர்களும் 'பெரியார் வாழ்க!' 'திராவிடநாடு திராவிடருக்கே' என்று பலத்த ஆரவாரம் செய்தார்கள்.

# திராவிட நாடு திராவிடருக்கே

எஸ். வேதசாயகம்

நாங்கள் திராவிடர்கள், எங்கள்நாடு திராவிடநாடு, எங்கள் மொழி திராவிட மொழிகளுக்குள் ஒன்றேயாகும். நாட்டை யாங்கள் ஆள எங்களிடம் விட்டுவிடுங்கள் என்று கேட்பதுதான் திராவிடக் கழகத்தின் கொள்கை. நம் உயிரைக் கொடுத்தாகிலும், மானத்தைக் காப்பாற்றின வீரர் வாழ்ந்த, வெற்றிமுரசு ஒலித்த திராவிடத் திருநாட்டில் நாம் தோன்றியவர்கள். நமது நாட்டின் இன்றைய நிலைமையில் திராவிடர்களாகிய நாம் அதிக இழிந்த நிலையில் இருக்கின்றோம். ஆகையால் நாம் யாவரும் உண்மை திராவிடர்களாக மாறி அஞ்சாநெஞ்சம் படைத்த வீரர்கள் என்பதை மீண்டும் நிலைநாட்டவேண்டும்.

திராவிடர்களாகிய நாம் சுதந்திரத்துடன் வாழவேண்டுமானால், நமக்குள்ளிருக்கும் தாழ்வுகளையும், இழிவுகளையும் போக்கி, நம்நாட்டைத் தனிநாடாக்கி சமத்துவத்துடன் நம் திராவிடர்கள் வாழ வேண்டுமானால் இப்போது சேலம் மாநாட்டின் தீர்மானத்தின்படி ஏற்படுத்தியிருக்கும் திராவிட கழகத்தில் சேர்ந்து திராவிடர்கள் எக்காலத்திலும் வெற்றியுடன் வாழ்பவர்கள் என்று வெற்றிமுரசு கொட்டவேண்டும். திராவிடர்கள் தாழ்ந்ததற்குக் காரணமென்ன? ஆரிய வெளிவேஷத்தைக் கண்டு அதனிடம் பற்றுகொண்டு அதன் வைதீகக் கொள்கைகளைப் பின்பற்றி, அதன்படி ஒழுகியதால் வந்த வினையாகும். பொய்யும் புரட்டும் நிறைந்ததும் ஆபாசமும் அநாகரீகமும் மிகுந்ததுமான புராண இதிகாசங்களை தொலைக்க வேண்டும். பிறப்பினால் உயர்வுதாழ்வில்லையென்றும் தீண்டாமையே வேண்டாமென்றும், ஒற்றுமையைக் குலைத்து வேற்றுமையை உண்டாக்கும் ஜாதியே கூடாதென்றும் தான் திராவிட கழகம் கூறுகின்றது.

நாம் யாருக்கும் பயப்படவேண்டிய அவசியமில்லை; நாம் துணிவும், தன்னல மறுப்புணர்ச்சியும், தியாக புத்தியும் கொண்டு கிளர்ச்சியைத் துவக்கி வேலை செய்ய வேண்டும். ஆகையால் திராவிடர்களாகிய நாம், அன்னியர் ஆட்சியழியவும், நம் நாட்டை நாமே ஆளவும், சமதர்மக் கொள்கையை நிலை நாட்டிவரும் பெரியார் அவர்களின் அரும் பணியை தலைமேற்தாங்கி அவர்களுடன் நாம் தோளோடு தோள் நின்று எவ்வளவு சிரமம் நேர்ந்தாலும் பொருட்படுத்தாமல் பார்ப்பனீயத்தை அடியோடு ஒழிக்க முயலவேண்டும். திராவிடர்களாகிய நமக்கு வீர உணர்ச்சியை எழுப்பியும், உயிர்கொடுத்தவர், உணர்ச்சியை ஊட்டியவர் பெரியார் என்று அறிந்தவர்கள் அவர் சொல்லுகிறபடி திராவிட கழகத்தில் சேர்ந்து நம் தென்னாட்டில் பல லட்சம் பேர்கள் அதில் அங்கத்தினர்களாய்ச் சேர்ந்து திராவிடநாடு திராவிடருக்கே என்ற உண்மையை நிலைநாட்டவேண்டும்.

(2ம் பக்கத் தொடர்ச்சி)

சுயமரியாதைத் திருமணம் தான் என்கிறேன். ஏனென்றால் இத்திருமணத்திற்குப் பார்ப்பான் இல்லை. குறைந்த அளவு சுயமரியாதைத் திருமணத்திற்கு அதுவே போதும், ஏனெனில் நம்மை இழிவுபடுத்துபவனை நாம் மதிக்கவில்லை. அதோடு அவனை இன்று பகிஷ்கரித்திருக்கிறோம்.

நெருப்பு, விளக்கு, சட்டிபானை பொருளற்ற சடங்கு, சப்பையான காரியம் முதலியவை இல்லை. இதனால் இது பெரிதும் பகுத்தறிவுத் திருமணமுமாகும்.

இன்றோடு, ஒரு சிறு விருந்தோடு இத்திருமணம் தீர்ந்துவிடுவதால் இது சிக்கனத் திருமணமுமாகும்.

புராணக் கதை, புராணப் பாட்டு, பஜனைக் கச்சேரி முதலியவை இல்லாமல் இத்தமாதிரி பகுத்தறிவுச் சொற்பொழிவு வைத்ததால் இதை சீர்திருத்தத் திருமணம் என்றும் சொல்லலாம்.

மற்றும் சில காரியங்கள் அதாவது தாலி கட்டுவது, அதிக பணம் போட்டு சேலை துணி வாங்குவது முதலியவை இன்று தவறானதாக இருந்தாலும் அவைகளைப் போக்கில் அதாவது பெண்களுக்குப் பகுத்தறிவும், சுயமரியாதையும், மான உணர்ச்சியும் ஏற்பட்ட உடன் தானாகவே நின்று விடும்.

ஆதலால் வாலிபர்களே, தாய்மார்களே, காலப் போக்கில் கண்டு உங்கள் இழிவு ஏழ்மை (குறைபாடு) அறியாமை ஆகியவைகள் நீங்கும்படியாக அதைப் பயன்படுத்தி புதிய உலகை சித்தரியுங்கள் என்று உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன்" என்பது ஆகப் பேசிய பின், திருமணத்தில் நாடார் பரிபாலன சங்கத்தாரால் பெரியாருக்கு வரவேற்பு வாசித்தளிக்கப்பட்டது. மணமகன் நன்றி தெரிவித்தார்.

கூட்டத்திற்கு சுமார் 600 வாலிபர்கள் வந்திருந்தார்கள். கூட்டத்தின் சிலர் விரும்பியதற்கு இணங்க திராவிடர் என்பதுபற்றியும், பொதுவுடமையை கண்டித்தும், அதனால் திராவிடர்கள் ஆரியர்களுக்கும், காங்கிரஸுக்கும் அடிமையாவது பற்றியும் தெளிவாக, பொதுவுடமைக்காரர்களும் சிரிக்கும்படியாக அரைமணி நேரம் பேசிவிட்டு உடனே நேரே ரயிலுக்குப் புறப்பட்டு அன்று இரவே ஈரோடு சேர்ந்துவிட்டார்.

## மரண அனுதாபம்

சென்னை ஆ. தி. ம. ஜ. ச. அங்கத்தினரும், டை சங்கத்தின் 15-வது மாநாட்டை வெற்றிகரமாய் நடத்தித் தந்தவரும், திராவிட நாட்டுத் திருத்தந்தை பெரியாரின் கொள்கையை பின்பற்றித் தீவிர பிரச்சாரம் செய்யும் ஆற்றலுடையவரும், திருப்பணிசல்லுள கிராமத்தில் முதன் முதல் சுயமரியாதைத் திருமணம் செய்தவரும், பிரபல மரக்கரி வியாபாரியுமாகிய தோழர் எஸ். டி. சுப்பையா அவர்களின் துணைவியார் தோழர் ஆறுமுக அம்மாள் தமது 20-வது வயதில் 9 மாத குமாரர் ஸ்டாலினையும் விட்டு 25-10-44-ல் அகால மரணமடைந்த செய்தி கேட்டு என் ஆழ்ந்த அனுதாபத்தை அம்மையாரின் குடும்பத்தினர்க்கு தெரிவித்துக் கொள்வதாக டை. சங்க உபதலைவர் தோழர் பா. ப. முத்தையா தெரிவிக்கிறார்.



## பகுத்தறிவு வால்யூம்

### விற்பனைக்குத் தயார்

1937ஆம் வருட பகுத்தறிவு பைண்டு வால்யூம் விற்பனைக்குத் தயார் ஆகிவிட்டது. ('37-மே முதல் '38-ஏப்ரல் வரை உள்ள புத்தகங்களில் '37 ஆகஸ்டு மாதம் புத்தகம் நீங்கி 11-புத்தகங்கள்கொண்ட வால்யூம்) விலை ரூ. 1-12-0. தபால் செலவு வேறு. (புக்போஸ்டில் அனுப்ப 6 அணா, ரிஜிஸ்தர் புக்போஸ்டில் அனுப்ப 9-அணா)

'38 மே முதல் '39 ஜனவரி முடிய 9-மாதங்கள் கொண்ட பைண்டு வால்யூமுக்கு விலை ரூ. 1-8-0. தபால் செலவு தனி. (புக்போஸ்டில் அனுப்ப 5-அணா. ரிஜிஸ்தர் புக்போஸ்டில் அனுப்ப 8-அணா)

குடி அரசு பதிப்பகம், ஈரோடு.


Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42, Cutchery street, Erode.